## பிரான்ஸ் 'நாடுகடத்த' முயன்ற இலங்கைத் தமிழர்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 11 இதழ் 197
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-8-1991


### மாரடைப்பால் மரணம்

(பாரிஸ்)
பிரான்ஸில் சட்டத்துக்கு மாருக நுழைந்த ஈழத்தமிழர் ஒருவரை திருப்பியனுப்ப விமானநிலையத்திற்கு கொண்டு வந்த போது அவர் மாரடைப்பினல் மரணமானுர்.
சட்டத்துக்குமாருக பிரான்ஸில் நுழைந்த சிவசம்பு ஈசன்
[3ம் பக்கம் பார்க்க]

### கொழும்பில் மேலும் குண்டுத் தாக்குதல்கள்?

(கொழும்பு)
கொழும்பு நகரில் மேலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாமென்ற அச்சத்தை யடுத்து கொழும்பு நகரில்
(4-ம் பக்கம் பார்க்க)

### கடற்படைக்கு நவீனரக கப்பல்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்பின் பேரில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் கடற்படையினருக்கென்று நவீனரக கப்பல் ஒன்றை உருவாக்கி
[4-ம் பக்கம் பார்க்க]

# வடக்கு - கிழக்கைத் துண்டாட இராணுவ திட்டம் தயாராகிறது!

## மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தகவல்

(ஹொங்கொங்)
வடக்கு - கிழக்கை துண்டாட இராணுவத் திட்டம் தயாராகிறது. வடக்கையும், கிழக்கையும் இராணுவ நடவடிக்கைமூலம் பிரிப்பதே இராணுவத்தின் அடுத்த நடவடிக்கையாக அமையுமென மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்ததாக 'ஏசியா வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

'ஆனையிறவுக்கான யுத்தம்' எனும் தலைப்பில் ஆகஸ்ட் 9ம் திகதி வெளிவந்த 'ஏசியாவீக்' சஞ்சிகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சஞ்சிகை பல இராணுவ அதிகாரிகளைப் பேட்டி கண்டுள்ளது.

கொப்பேகடுவ மேலும் தெரிவிக்கையில்; யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற திட்டம் தயாரிக்கப்படவுள்ளது இது படையின் மிகமுக்கிய இலக்காகவுள்ளது என்றார்

விடுதலைப்புலிகள் தற்போது மரபு வழி இராணுவமாகமாறியுள்ளனர். அவர்களை இனி கெரிலாக்கள் என கூறமுடியாது என்று இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்

வெற்றிலைக்கேணிப்பகுதியில் புலிகள் எங்களை எதிர் பார்த்திருந்தார்கள். இந்த ஒரு வழியால்தான் படையினர் தரையிறங்கலாமென அவர்களுக்கு நன்கு தெரியுமென தெரிவித்துள்ளார் புலிகளின் தாக்குதலில் தோள்மூட்டு நொருங்கியநிலையிலுள்ள கடற்படை அதிகாரி.

இது புலிகளின் பிரதேசம் என்றார் மற்றொரு இராணுவ அதிகாரி. போர்ச் சூழ்நிலையை அவதானித்து வந்த இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், சாகத் துணிந்த சிறிய பையன்களுடன் அனுபவமில்லாத படையினர் மோதிக் கொண்டதாகக் கூறுகிறார்.

படையினர் தரப்பில் பெருமளவு இழப்பு இரத்மலானை விமானநிலையத்தில் இருந்து படையினரின் மோட்டார் சைக்கிள்கள் முன் செல்ல, அம்புலன்ஸ்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். முதலிரு வாரத்தில் 60 முதல் 70 படையினர் தினமும் படுகாயம் அடைந்த வந்தவண்ணமிருந்ததாகக் கூறுகிறார் ராணுவ ஆஸ்பத்திரி இயக்குநர் பிரிகேடியர் சி. துரைராஜா. (சி)

## முறிவடையும் நிலையில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு

(சென்னை)
தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ்-அ.இ.அ.தி.மு.க. கூட்டு உடையும் நிலைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை கடந்த இரு மாதங்களாக தமிழகத்தில் ஆட்சியிலுள்ள அ.இ.அ.தி.மு.க. கட்சி பல உடனடிப் பிரச்சனைகளை சமாளிக்கமுடியாமல் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்பட்டது

### யாழ். சுண்டுக்குளி பகுதியில்

## விமானக் குண்டு வீச்சு வயோதிபமாது தலைசிதறிபலி

(யாழ்ப்பாணம்)
சுண்டுக்குளிப் பகுதியில் நேற்று 3 பொம்மர்கள் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரு வயோதிபப் பெண் கொல்லப்பட்டார் பலர் காயமடைந்தனர். 7 வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுப் பகல 11 மணியளவில் மூன்று குண்டுவீச்சு விமானங்கள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீடுகள் மீது அடுத்தடுத்து 7 குண்டுகளை வீசியதில் 7 வீடுகளும், 2 கடைகளும், அருகிலுள்ள பால்சபையும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

தீவுப் பகுதியிலிருந்து அகதியாக வெளியேறிய சின்னத்தம்பி மாரிமுத்து (52 வயது)
(2ம் பக்கம் பார்க்க)

### வரதனின் கூட்டாளி கைது

(கொழும்பு)
கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பு சூத்திரதாரி வரதனின் கூட்டாளி எனறு கருதப்படும் இராஜேஸ்வரன் என்பவர் கொழும்பில் பொலிசாரினல் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 25 சடலங்கள் மீட்பு

(மணிலா)
களுவாஞ்சிக்குடியருகே புதைக்கப்பட்டு அழுகிய நிலையிலிருந்த 25 உடல்கள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டதாக பாதுகாப்பு பிரிவு தகவல்கள் தெரிவித்தன
இந்த சடலங்கள் பாதுகாப்புப் படையினருடையதாக
(4ம் பக்கம் பார்க்க)

### ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள படையினரால் குடிமனைகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.
பலாலியிலிருந்து குப்பிளானுக்கும், காரைநகரிலிருந்து பொன்னலை நோக்கியும், ஊர்காவற்றுறையிலிருந்து அராலித்துறக்கும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

## மணலாறிலும் விமான தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
மணலாறு மாவட்டத்தில் விமானத்தாக்குதல் மற்றும் படையினரின் தேடுதல் வேட்டை போன்றவை நேற்றும் நேற்றுமுன் தினமும் நடத்தப்பட்டன.
நேற்றுக் காலை 6-00 மணியளவில் மணலாறு காட்டுப் பகுதியில் 3 பொம்பர்களும், அவ்ரோ விமானமும் இணைந்து இருபதிற்கும் அதிகமான குண்டுத்தாக்குதலை நடத்தின.
நேற்றுக் காலை 10 மணி
[4-ம் பக்கம் பார்க்க]

### நான்கு பேர் கொண்ட குழு

## மனித உரிமை மீறலை கண்காணிக்க நியமனம்

(கொழும்பு)
மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை அவதானிக்கவென நான்கு அங்கத்தவர்கள் கொண்ட தனிக்குழுவொன்றை ஜனாதிபதி திரு. பிரேமதாசா நியமித்துள்ளார்.
இம்மாதம் 23ம் திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு இக்குழுபதவி வகிக்கும்.

## தகராறு காரணமாக பொதுமகன் மரணம்

(யாழ்ப்பாணம்)
இம்மாதம் 23 ஆம் திகதி ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள பயணிகள் சோதனை நிலையத்திற்கு அண்மையில் புலிகள் இயக்க அங்கத்தவர் ஒருவருக்கும் பொதுமகன் ஒருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் பொதுமகன் கடுமையாக தாக்கப்பட்டு இறந்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.
இந்நிகழ்வை அடுத்து சம்பந்தப்பட்ட இயக்க அங்கத்
[4-ம் பக்கம் பார்க்க]

### ஜே.ஆர். சுகயீனம்

கொழும்பு]
முன்னள் ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன மார்புச்சளி நோயினல் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது
(2ம் பக்கம் பார்க்க)

### திருமலை உவர்மலை பகுதியில்

## அரச காணிகளில் குடியேறிய தமிழர் படையினரால் வெளியேற்றம்

(திருமலை)
திருகோணமலை நகரிலுள்ள உவர்மலைப்பகுதியில் அரச காணிகள் மற்றும் தனியார் காணிகளில் குடியிருந்த தமிழ் மக்கள் பொலிசாரினலும், இராணுவத்தினராலும் வெளியேற்றப்படவிருக்கிறார்கள்.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை; மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1531)

ஜாம், சோஸ் போத்தல்கள் (Jam Sauce Bottles) விலை ரூ. 3/-க்கு குறையாமல் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும். Taste line Industries (PVT) Ltd., No: 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். தட்டாதெருச் சந்தியிலிருந்து அரசடி வீதியால் நல்லூர் நோக்கிச் செல்லும்போது இடதுபக்கம் வரும் முதல் ஒழுங்கை. [சி- 5165]

### வாங்க/விற்கப்படும்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், உர,சீமெந்து உறை, சஞ்சிகைகள், வெற்றுத் தகரங்கள் போத்தல் வகைகள் வாங்கப்படும் விற்கப்படும். முகாமையாளர் V. R. பழைய புத்தகசாலை 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [சி-5143)

### வானொலி நாடகம்

இன்று விற்பனையாகின்ற இரண்டே இரண்டு வானொலி நாடக நூல்கள் அராலியூர் ந சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- மாணவர்களும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவை. (சி-5142)

### பாடசாலை அனுமதிகள்

யாழ்ப்பாணம் பிரபல்ய பாடசாலைகளில் முதலாம், ஆறும் ஆண்டு வகுப்பு அனுமதிகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வகுப்புகள் நாவலர்வீதி, திருநெல்வேலி, நல்லூர் இடங்களில் நடைபெறும். பயன்பெற விரும்பும் பெற்றோர் பெயர்களை பதிவுசெய்யலாம். Good Shepherd, 210, Navalar Road, Jaffna. [சி-5199]

### புலமைப் பரிசில்

அண்மையில் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை விளுத்தாளுக்கமைவான புதிய மாதிரிப் பரீட்சை 28-8-91 புதன் காலை 10-00 மணிக்கு நடைபெறும். வெளி மாணவரும் பங்குபற்றலாம் தொடர்புகொள்க. எலைற் கல்வி நிறுவனம், 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5200)

### காணவில்லை

551, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிக்கும் கனகசபாபதி சிவகுமாரனின் அடையாள அட்டை, நல்லூர் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழாவின் போது தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். ஆ. க. கனகசபாபதி சன்ஸ், 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 5203)

### யாழ். சுண்டுக்குளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் வயோதிப மாது இக் குண்டுவீச்சில் அகப்பட்டுத் தலை சிதறிப் பலியானார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை எம். பரமலிங்கம் (வயது 48), மகள் பி. பரிமளாகாந்தி (வயது 23), சிவமங்களசோதி (வயது 14) ஆகிய மூவரும், இராஜேந்திரன் (26 வயது), செபமாலை மரியாய் (60 வயது), கதிர்வேலாயுதபிள்ளை ஆகியோரும் படுகாயம் அடைந்தனர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் இக்குண்டுவீச்சினால் சேதம் அடைந்துள்ளது. (வி)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14-05-1935

உதிர்வு: 18-08-1989

திதி: 27-08-1991

**ஆ. சுப்பிரமணியம்**

[ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்]

அன்பின் உறைவிடமாய் பாசத்தில் பிறப்பிடமாய்
அன்பின் நிறைகுடமாய் எம் இதயமெல்லாம்
நிறைந்திருக்கும் அன்புத்தெய்வமே
எம்மையெல்லாம் ஆருத்துயரில் தவிக்கவிட்டு
மீளாத்துயில் கொண்டுவிட்டாயே
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்.

லக்ஷ்மி மனை,
தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

[சி5148]

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் டக்ளஸ்**

**செல்வன் சதீஷ்கரன் [சதீஸ்]**

| | |
|---|---|
| மானிப்பாயில் | ஆனையிறவில் |
| மழலையாய் | வரலாறுய் |
| 12 - 1 - 1973 | 13 - 7 - 1991 |

எப் பிறப்பில் காண்போம் — இனி உன்
ஆருயிர் சித்தப்பாவையும்அன்புத் தாயையும்
உடன் பிறப்புக்களையும் உறவினர்களையும்
தவிக்கவிட்டு விட்டு எங்கு சென்றாயோ
— எம் செல்வமே
கற்றவரை உற்றவரை கண்ணிமைபோல்
காத்து நின்றாய்
எல்லை பறிபோகுதடா இனியென்ன
உயிர் பெரிதா என்று
தமிழன்னை விலங்கொடிக்கச் சென்ற
வீரமறவனே
டக்ளஸ் என்ற நாமம் சூட்டி
தீரமுடன் இணைந்து
எதிரிகளின் பல களம் கண்டு ஆனையிறவுத்தளத்தின்
உல்லாசவிடுதியில் சல்லாபம் செய்த எதிரிகளை
கதிகலங்க வைத்தாயே
ஈழமண்ணில் உன் உடம்பு சாய்ந்ததுவே
உன்னைச் சிலை வடிப்போம் ஐயா
நீர் என்றும் எங்களுடனே இருப்பீர் ஐயா

உன் பிரிவால் வாடும்

சித்தப்பா (யோகராசா), அம்மா,
அண்ணா சுதாஷ்கரன், அண்ணி தயாளினி.
அக்கா பிறேமலதா, யசோதலதா,
தங்கை கேமலதா, தம்பிமார், ராஜ்கரன்,
ரமேஷ்கரன், பிரபாகரன்,

ஹோட்டல் நல்லதம்பி.
ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

(சி-5192)

---

### விசாரணைக்குழு

(புதுடில்லி)

திரு: ராஜீவ் காந்தி படுகொலை சம்பந்தமாக விரிவான விசாரணையொன்றை மேற்கொள்ளவென இரண்டாவது புலனாய்வு விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

### ஜே. ஆர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியர்களின் ஆலோசனைப்படி இவர் தற்போது பூரண ஒய்வெடுத்துக் கொண்டிருப்பதாகவும் விரைவில் குணமடைந்துவிடுவார் எனவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை வேல்விழி**

**இராசமாணிக்கம் தங்கேஸ்வரி (கமலா)**

| | |
|---|---|
| வீர ஜனனம்: | வீர மரணம்: |
| 18-02-1972 | 28-07-1991 |

கட்டைக் காட்டினிலே
கமலா எனும் பெண் புலி
கடமை உணர்வுடனே
களத்தினிலே புகுந்து நின்று
கயவர்களின் கும்பலதை
கதிகலங்கி நிறைவைத்து
கடும் சமர் புரிகையிலே
களப்பலி ஆகிவிட்டாள்
களப்பலி ஆகிவிட்ட
கமலா எனும் வேங்கைக்கு எம்
கண்ணீர்ப் பூக்களை
காணிக்கை யாக்கு கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இன்நாளில் நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

[சி 5196]

---

# 31-ம் நாள் நினைவலைகள்



| | |
|---|---|
| வீர ஜனனம்: | வீர மரணம்: |
| 23 | 27 |
| \| | \| |
| 11 | 07 |
| \| | \| |
| 1968 | 1991 |

**வீரவேங்கை க. பேரின்பமூர்த்தி**

**கப்டன் கோபி (குலம்)**

களம் பல கண்ட வேங்கை
கந்தையா பேரின்பமூர்த்தி
குலம் என்று அழைப்போம் நாங்கள்
கோபி அவன் இயக்க நாமம்
தமிழின விடுதலைக் காய்
தம்முயிர் பணயம் வைக்கும்
மறவரில் ஒருவனாக
மாற்றானை ஆனையிறவில்
கதி கலங்க வைத்துக்
களப்பலி ஆகிவிட்டான்
தமிழீழம் தோன்றும் போது
தரணியில் பிறப்பான் மீண்டும்.

உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா,
அண்ணன்மார். தம்பிமார், தங்கை
மற்றும் ஊற்றூர், உறவினர்கள்.

6-ம் வட்டாரம்,
வேணைத்துறை மேற்கு.

[சி 5197]

★ "அரசு தரப்பினர்

# இராணுவ மேலாதிக்க நிலையில் பேச முற்படுவது சமாதான பேச்சுக்கு குந்தகமாய் அமையும்"

## - அன்ரன் பாலசிங்கம் பேட்டி -

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு இராணுவ மேலாதிக்க நிலையில் பேச்சுவார்த்தை நடத்த அரசு முற்படுமானல் அது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு குந்தகமாக அமையும் என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தை என்ற புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றமெதுவும் இல்லை. யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் புலிகள் தொடர்புகொண்டிருப்பதாயும் அதன்மூலம்பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் வரலாம்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளும் திரு. பாலசிங்கத்தின் பதில்களும் வருமாறு:

கே: சமாதானத் தீர்வுக்கான முயற்சி ஒன்றை அமைச்சர் தொண்டமன் மேற்கொண்டிருந்தாரே?

ப: தனிப்பட்ட வர்த்தகர் ஒருவர்மூலம் அவரது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது உத்தியோபூர்வமானதாக இருக்கவில்லை. இனப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் தமிழ் மக்களின் பிரச்னைக்கு முடிவேற்படவேண்டுமென அமைச்சர் தொண்டமான் உண்மையாக விரும்பினல் அவர் யாழ்ப்பாணம் வரட்டும். எங்களோடு பேச டும் நாங்கள் தயாராயிருக்கிறோம்



கே: ராஜீவ் கொலையுடன் புலிகளின் பெயர் சம்பந்தப்படுத்தப்படுகிறதே?

ப: ராஜீவ் கொலைக்கும் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. புலிகள்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எதுவித ஆதாரமும் இல்லை.

வி. பி. சிங் இந்தியப் பிரதமராக இருந்தபோது அவரும் திரு. கருணாநிதியும் அளித்த அனுமதியின் பேரில் சிகிச்சைக்காக இங்கிருந்து இந்தியாவுக்குச் சென்றிருந்த எமது இயக்க வாலிபர்களையே அவர்கள் கைது செய்கிறார்கள். இவ்வாறாக கைதுசெய்யும்பணி கலைஞரின் பதவிக்காலத்திலே ஆரம்பித்துவிட்டது.

போரில் காயமடைந்து ஊனமடைந்த நிலையில் சிகிச்சைக்காக தங்கியிருப்பவர்களை ஆதாரமின்றிக் கைதுசெய்து வருகிறார்கள் இவ்வாறு கைதாகி சித்திரவதைக்குள்ளாவதை தடுப்பதற்காகவே புலிகள் சிலர் சயனைட்அருந்தி மரணமடைந்துள்ளனர்.

கே: ராஜீவின் கொலைக் குற்றச்சாட்டும் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் இந்திய அரசின் நடவடிக்கைகள் உங்களது போராட்ட நடவடிக்கைகளை பாதிக்கவில்லையா?

ப: அரசியல், இராணுவ ரீதியாக பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. எனினும் எமது இயக்கத்தைக் களங்கப்படுத்தும் வகையிலான இந்தியாவின் சர்வதேச ரீதியிலான முயற்சிகளினல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அரசும், தமிழக அரசும் இணைந்து எமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் எங்களுக்கு ஆதரவு உண்டு. அதனல் இந்திய அரசின் முயற்சிகள் எந்த வகையிலும் எமது போராட்டத்தை பாதிக்காது.

கே: ஆனையிறவுப் போரில் உங்களுக்கேற்பட்ட சேதங்கள் என்ன? இராணுவத்தின் இழப்பு என்ன?

ப: இப்போரில் 500 புலிகள்வரைவீரமரணமடைந்துள்ளனர். ஆயிரம் பேர்வரை காயமடைந்துள்ளனர் இராணுவத் தரப்பில் 400க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் ஆயிரத்துக்கும் அதிகமானேர் காயமடைந்துமுள்ளனர்.

கே: வித்தியாசமென வர்ணிக்கப்படும் ஆனையிறவுப் போரின் விளைவென்ன? அது எதனை உணர்த்தியுள்ளது?

ப: இப்போர் புலிகளின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதுமுக வளர்ச்சியை காட்டியுள்ளது. எமது படைபலம், ஆயுத பலம், போர்த்திறன் என்பவற்றை வெளிப்படுத்தியுள்ளது. 5 முகாம்களை காப்பாற்றுவதற்காக அரசு மேற்கொண்ட பெரிய படையெடுப்பை முறியடிப்பதற்கான பாதுகாப்பு யுத்தமென இரு வகையாக நடைபெற்றது.

வெற்றிலைக்கேணி கட்டைக்காடு, புல்லாவெளி பகுதியில் எமக்கு பாதகமான பூகோள அமைப்புக்கொண்ட பரந்த வெளியான வனாந்தரப் பிரதேசத்தில் விமானப்படை, கடற்படை, தரைப்படை ஆகிய மும்முனைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்து முன்னேறவிடாமல் 3 வாரத்திற்கு மேல் தடுத்து நிறுத்தினேம்.

மொத்தத்தில் இராணுவ நடவடிக்கைகளின்மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை ஆனையிறவு யுத்தத்தின்மூலம் எடுத்துக் காட்டியுள்ளோம்." (சி)

### பிரான்ஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் பிரான்ஸ் அரசினல் வலுக்கட்டயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நோக்கில் விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

இவருக்குக் கடுமையான மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து இவர் மரணமானர்.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கணக்காளர்களுக்கான கருத்தரங்கு இன்று 27ந் திகதி யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறுமென யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப் புலிகள மக்கள் முன்னணி கூட்டுறவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (வி)

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வவுனியா கண்டி வீதியில் ஒரு பாசல் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. அதனுள் பல வெளிநாட்டு, உள் நாட்டு, கடிதங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், புகைப்படப் பிரதிகள், அடங்கியுள்ளன. எனவே இதன் உரிமையாளர் தகுந்த அத்தாட்சியுடன் வவுனியாவில் உள்ள தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் நெல்லை. க. பேரன்

அமரர் நெல்லை க. பேரன், அவரது மனைவி, மக்கள் ஆகியோரின் நினைவாக எங்கள் இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்


நிர்வாகிகள்

ஞானசம்பந்தர் கலை மன்றம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி-5125)

---

## வேதனையின் விளிம்பில்



### குமாரலிங்கம் ரஞ்சகுமார்

விரிவுரையாளர் 1987 - 1991

மலர்வு: 18 - 03 - 1964

உதிர்வு: 14 - 07 - 1991

எங்களின் பார்வையில் இருந்து அவசரமாக விடுபட்டுப்போன தளிரே
முன்னேற்றத்தின் பாதையில் நீ வேகமாக வந்தவன் இல்லை என்ருல்
உன்னை 23 வயதில் விரிவுரையாளன் ஆக்கியிருக்குமா?
சொல்வல்லமை உள்ளவனே செல்லுக்கா உன்னை இரையாக்கிஞய்
எத்தனையோ பேருக்கு பாடம்புகட்ட வேண்டிய நீ பாதியில் மறைந்தாயே?
உயரத்தில் இருப்பாய் என நினைத்தோம் ஆனல் எமக்கு எட்டாத
உயரத்திற்கு அல்லவா போய்விட்டாய்?
துயரத்தில் உள்ள எங்களை எண்ணிப்பார் உன் பிரிவுக்குப் பின்னல்
உன் நாம மேனியை புகழ் போர்வையால் மட்டுமே மூடியுள்ளோம்
ஏன் ஐயா இந்த அவசரம்? உன் மரண நாடகத்தை எப்படி உன் உடல்
தாங்கிக்கொண்டது நீ வரும் நேரங்கள் நித்தம் வருகின்றன
ஆனல் உன் பாதங்கள் எங்களை நோக்கி வரவில்லை
துன்பம்...... துயரம் சோகங்களின் உறவினர்களாக வாழ்கிறோம்
உன் இழப்பு எங்களுக்கு மட்டும் அல்ல இந்த ஈழத்திற்கும்
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை மலர்களைத் தூவுகிறோம்......

மீளாத்துயருடன்

மழலை புகைப்பட நிலையம், நண்பர்கள்

திருநெல்வேலி.

(சி-5194)

---

## நாற்பத்தைந்தாவது நாள் வீர அஞ்சலி



| வீர ஜனனம்: | வீர மரணம்: |
|---|---|
| 18 — 01 — 1975 | 14 — 07 — 1991 |

### வீரவேங்கை நியூட்டன்

[கந்தையா தேவராசா]

காலத்தால் அழியாத காவியமானய்
கண்ணில் தெரியும் ஓவியமானய்
நெஞ்சினில் விதைத்த நெருப்பானய்
விடுதலைக்கே வித்தானய்
என்னென்று உன் முடிவைக் கூற
ஏதும் அறியாது ஏங்குகிறோம்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

தாய், தந்தையர், சகோதரர்:
சகோதரி, மைத்துனர்.

திக்கரை,
கனபூமி, காரைநகர்.

[சி 5201]

# 45-ம் நாள்
# நினைவஞ்சலி



## லெப்டினன் கேர்ணல் சூட்டி
[இராசு செல்வேந்திரன்]
கெருடாவில்

தோற்றம்: 28 - 05 - 1967
வீரமரணம்: 14 - 07 - 1991

செந்தமிழ் அடிமை கொள்வதோ - இங்கு
சிங்களம் தங்க விடுவதோ என
செங்களம் ஆடி வெம்பகை ஓட்டியே
வேங்கை வீரனாய் நின்றவன் சூட்டியே
இந்திய இராணுவம் தேடியபோதினில்
எதிர்த்துமே வெற்றி கொண்டவன்
கட்டைக்காட்டின் சரித்திரப் போரினில்
களத்தினில் மாவீரனாய் நிறைந்தவன்.

[ஏ 1533] தென்மராட்சி மக்கள்

## காயமடைந்த சிறுவன் மரணம்
[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை சம்பவத்தில் காயமடைந்த 10 வயதுச் சிறுவன் சுவாமிநாதன் துஷ்யந்தன் யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று உயிரிழந்தார். (139)

## ஒத்திவைப்பு
(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் இன்று 27-ம் திகதி தொடக்கம் 30 - 08 - 91 வரை மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவிருந்த 'சமூகத் தொண்டர்களுக்கான சுகாதாரப் பயிற்சி' தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் வி. பொ. பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

## 25 சடலங்கள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கப் படுவதாக வெரித்தாஸ் அறிவித்தது

## தகராறு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவரும் இன்னும் ஒரு நபரும் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## கடற்படைக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி

யுள்ளது.

ஆழ்கடலிலும், கரையோரத்திலும் செல்லக்கூடிய இந்தக் கப்பல் ஆட்கள், வாகனங்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்லக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரெத்தினம் கந்தையா

ஆனைப்பந்தியைச் சேர்ந்த திருமதி நாகரெத்தினம் அவர்கள் 26-08-91 (திங்கள்) காலமானார். இவர் காலம்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் திருமதிகள் மகேஸ்வரி, சற்குணாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு: காசிலிங்கம் (கிளிநொச்சி), திரு. பாலசிங்கம் [பாண்டியன்தாழ்வில் கடை வைத்திருப்பவர்) ஆகியோரின் மாமியாரும், திரு/திருமதி பாலச்சந்திரன் - ரஜனிதேவி, பாலவர்ணன்-தயாநிதி (ஜெர்மனி), பாலஇந்திரன்-சகுந்தலா, பாலச்சந்திரேஸ்வரி-சின்னராசா (பிரான்ஸ்), பாலஇந்திரேஸ்வரி-இராசலிங்கம், செல்வன் பா. கஜேந்திரன் ஆகியோரின் பேத்தியுமாவார். ஈமக்கிரிகைகள் 27-8-91 (செவ்வாய்) பி. பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: க. பாலசிங்கம் [மருமகன்]

88/6, பருத்தித்துறை வீதி,
[குருநாதசுவாமி கோவிலடி]
யாழ்ப்பாணம்.

[சி-5204]

## வீரவணக்கம்
(யாழ்ப்பாணம்)

ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் ஆனையிறவு, கட்டைக்காடு பகுதிகளில் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த புலிகளின் விபரம்:

ஜூலை 13-ல் வீரவேங்கை சுரேஸ் (சுப்பிரமணியம் மணிவண்ணன் ஒட்டுமடம், யாழ்ப்பாணம்). ஜூலை 17 பாலச்சந்திரன் (பியதாசா யேசுராஜன் மடு வீதி, மன்னார்], புஷ்பன் [பிரகாசம் நோயல் தோமஸ், நெடுந்தீவு], பரணி (மூத்துவேல் காந்தலிங்கம், வேலணை] ஆகியோர் ஆனையிறவிலும்.

ஜூலை 21 யோகன் [கிட்ணர் உதயகுமார், பெரிய புல்லுமலை, மட்டக்களப்பு], கபூர் (தங்கவேல் நடேசன், பாரதிபுரம், கிளிநொச்சி), அயூந்தன் (பொன்னுத்துரை மோகன் நாவற்குழி, கைதடி.] கட்டைகாட்டிலும்.

ஜூலை 27-ல் சௌகான் (சிவானந்தன் ஜோய் அன்ரனி, பண்டத்தரிப்பு) ஆகியோர் கட்டைக்காட்டில் இடம்பெற்ற நேரடி மோதலிலும் ஆகஸ்ட் 3-ல் கப்டன் சாரா (இமானுவல் ஜோன்சன் உவர்மலை) விமலசுந்தரம் (வீரசிங்கம் தெய்வநாயகம் தம்பலகாமம்) குமணன் (பரமகுமார் தியாகராஜா திருமலை) ஆகியோர் ஆனையிறவிலும்.

ஆகஸ்ட் 8-ல் பகீர் [ஜெயராஜா கனில், இளவாலை] ஆனையிறவில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திருமலை
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் குடியிருந்த காணிகளில் திருமலையில் திட்டமிட்டுக் குடியேற்றப்படுகின்ற சிங்களவர்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## கொழும்பில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

குறிக்கப்பட்ட சில வீதிகள் தடைசெய்யப்பட்டு வாகனங்கள் தீவிரமாக சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் குண்டுத்தாக்குதல் பிரிவு ஒன்று கொழும்பில் தங்கியிருப்பதாக பொலிஸார் நம்புகின்றனர்.

இதனால் சந்தேகத்திற்கிடமானோர் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

கொழும்பில் இன்னமும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் மறைத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் சந்தேகிகப்படுகிறது.

## மணலாறிலும்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யளவில் கொக்குளாய் பகுதியில் அவ்ரோவிலிருந்து பலத்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இம்மாவட்டத்தின் உள்ள 39ம் கிராமம், சிறிலங்கா இராணுவத்தினரால் அதிகாலை 5-30 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டு நான்கு அப்பாவி இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

இங்குள்ள 38ம் கிராமத்தில் நேற்றுப் படையினரால் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இத்தேடுதலில் பலர் கைதுசெய்யப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

## 15-7-1991ல் நடந்த ஆட்லறி ஷெல் தாக்குதலினுல் கருகிப்போன எம்மலர்களின்
# 45-ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

கண்மூடித் திறந்த கணம்
உங்கள் உயிர்கள் பறிக்கப்பட்ட கதை
நம்ப முடியவில்லை... நம்ப முடியவில்லை.
..........................
இப்பொழுதுதானே எங்களோடு
பேசினீர்கள்

அதற்குள் எப்படி?
எங்களை நீங்கள் மறக்கலாம்!
உங்களை நாங்கள் மறக்கலாம்.

★


ஓர் இரவில்...ஒரு பொழுதில்
கருகிய எம் மலர்களுக்காக
30-8-1991 வெள்ளி அன்று
எமது இல்லத்தில் நடைபெறும்
கிரியை நிகழ்ச்சியிலும்-
மதியபோசன வைபவத்திலும்
கலந்து கொள்ள
பேரனின் நண்பர்கள்
அனுதாபிகள்
தெரிந்தவர்களை அழைத்திடும்...

குடும்பத்தினரும்,

தம்பியார் க. பாலேந்திரம்.

காளிகோவிலடி,
நெல்லியடி.


(எ 1532)



எழுத்தாளர்
**நெல்லை க. பேரன்**
தோற்றம்: 18-12-1946



**திருமதி பே. உமாவதி**
தோற்றம்: 15-06 1956



**செல்வன் பே. உமாசங்கர்**
தோற்றம்: 02-10-1976



**செல்வி பே. ஷர்மிளா**
தோற்றம்: 13-08-1984

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News'Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.